**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 301/2019**

பெயர் : கணபதி P.W.2.

த/பெ. : தாஸ்

தேதி : 18.09.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை:** –

1. வாதி இந்த வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் பாகபிரிவினை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எத்தனை அயிட்ட சொத்துகளை பொறுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துகள் கூட்டு குடும்ப வருமாத்திலிருந்து வாங்கபட்டதா அல்லது கூட்டு குடும்ப உழைப்பிலிருந்து வாங்கப்பட்டதா என்றால் கூட்டு குடும்ப உழைப்பிலிருந்து வாங்கபட்டது. தாவா சொத்துகள் வாங்குவதற்கு முன்னர் மாசிலாமணியின் பெயரில் சொத்துகள் இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாசிலாமணியின் பெயரில் உள்ள சொத்திலிருந்து தாவா சொத்து வாங்கப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. பாலகிருஷ்ணன் வீட்டிலிருந்து பிரிந்து தனியாக வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். பாலகிருஷ்ணன் என்பவர் தனியாக வசித்து வந்தபோது உழைத்து சம்பாதித்தாரா என்றால் சம்பாதித்தார். தாவா சொத்துகள் 1ம் பிரதிவாதியின் உழைப்பில் வாங்கப்பட்ட சொத்துகள் என்றாலும், கூட்டு குடும்ப உழைப்பிலிருந்து மேற்படி சொத்துகள் வாங்கபடவில்லை என்றாலும் சரியல்ல. மாசிலாமணிக்கு சொந்தமான சொத்துகள் இந்த வழக்கில் சேர்க்கபட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. எனக்கு சொத்து சம்பந்தப்பட்ட விபரமும் தெரியாது என்றாலும், வழக்கு சம்பந்தப்பட்ட விபரமும் தெரியாது என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் பொய்யான விவரங்களை கூறி பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.